பாதிக்கப்பட்டுள்ளனர். சமயத்தில் இடஒதுக்கீடு பற்றி கூறியுள்ளார்.



# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி கேப்லான் யு.எஸ்.ஏ.வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, ஆக. 19–** புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை, கேப்லான் யு.எஸ்.ஏ. இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் தனசேகரன், கேப்லான் இயக்குனர் டென்சின் ஜெம்யங் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியின்போது கேப்லான்னின் இந்திய தலைமையாளர் அபிஷேக் பவாதங்கர் மற்றும் செயலாளர் நாராயணசாமி கேசவன், மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ராஜகோவிந்தன், துணை இயக்குனர்–டீன் டாக்டர் காக்னே, அகாடமிக் டீன் டாக்டர் கார்த்திகேயன், ரிசர்ச் டீன் கலைசெல்வன், துணை கண்காணிப்பாளர்கள் கிரிஜா மற்றும் ஜெயஸ்ரீ, ஒருங்கிணைப்பாளர் சவுந்தர்யா, பதிவாளர் தட்சிணாமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

கேப்லான் கற்றல்-கற்பித்தலில் ஈடுபட்டுள்ள உலக பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனமாகும். தற்போது இந்நிறுவனம் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை புதுவைக்கும் தன் கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்ய திட்டமிட்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளது.

இதன் மூலம் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மாணவர்களின் மருத்துவக்கல்விக்கு ஒரு மதிப்புக்கூட்டலை அளிக்க முன் வந்துள்ளது.

நெக்ஸ்ட் தேர்வு மருத்துவ மாணவர்களுக்கு தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என அனைவரும் அறிந்ததே. மருத்துவராக பதிவு செய்யவும், பணியாற்றவும் நெக்ஸ்ட் தேர்வில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும். கேப்லான்நிறுவனம் கடந்த 83 வருடங்களாக மருத்துவ படிப்பிலும் சிறந்து விளங்கவும், நெக்ஸ்ட் மற்றும் சர்வதேச அளவிலான போட்டி தேர்வுகளில் வெற்றிபெறவும் பயிற்சி அளிப்பதில் முன்னோடியாக உள்ளது.

2023-24 கல்வி ஆண்டிலிருந்து கேப்லான் நிறுவனம் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மாணவர்களுக்கு நெக்ஸ்ட் போன்ற போட்டித்தேர்வுகளுக்கு மட்டுமல்லாது சர்வதேச அளவிலான போட்டித்தேர்வுகள் குறிப்பாக யு.எஸ்.எம்.எல்.இ. மற்றும் சர்வதேச பணி வாய்ப்புகளுக்கும் தகுதி பெறுவதற்கு திறம்பட பயிற்சி அளிக்கவுள்ளது.

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் தனசேகரன் கேப்லான் நிறுவனத்துடன் இணைதல் மூலம் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மாணவர்கள் தங்களது மருத்துவ பயிற்சியை மேற்கொண்டு மருத்துவத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே இதன் நோக்கம் எனக் கூறினார்.